## இஸ்ரவேலின் நாதன்

இஸ்ரவேலின் நாதனாக வாழும் எஙுகள் தேவன்
சத்திய ஜீவ பாதை காட்டும் தேவன்
மனிதனாய் பூமியில் பிறந்த எஙுகள் தேவன்
நித்திய ஜீவன் தந்திடும் என் தேவன்

அப்பா பிதாவே தேவனே
உம் இராஜ்யம் வர வேண்டுமே
உந்தன் திரு சித்தம் பூமியில்
என்றென்றும் நிறைவேற வேண்டுமே

செங்கடலில் நீர் அன்று பாதை காண்பித்தீர்
பாலைவனத்தில் நீர் மன்னா கொடுத்தீர்
கடும்பகலில் மேகஸ்தம்பமாய்
இரவில் ஜீவ அக்கினியாய்
சீனாய் மாமலை மீதினில் நீர்
நியாயப் பிரமாணங்கள் கொடுத்தீரே

மனிதனாய் பூமியில் அவதரித்தீர்
மண்ணுலகில் ஜீவ பலியானீர்
திரு இரத்தமும் ஜீவ அப்பமுமாய்
இவ்வுலகத்தின் ஜீவனாய்
வழியும் சத்தியமும் ஆனவரே
உம் திரு நாமம் வாழ்த்திடுவேன்